<u>**DEPOSITION OF WITNESS**</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC. 571/2024
Sessions)

( Prosecution P.W.5
Deposition of witness for (Defence
(Court

| Name | கருப்பசாமி | -- | |
|---|---|---|---|
| Father's Name | மாரியப்பன் | Calling | கூலி |
| Village | மகாராஜபுரம் | Religion | |
| Taluk | வத்றாயிருப்பு | Age | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 13th day of October 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வத்திராயிருப்பு தாலுகா, மகாராஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். செங்கல் சூளையில் வேலை பார்க்கிறேன். அ.சா.3 பொன்னுத்தாய் எனது உடன் பிறந்த தங்கை ஆவார். அ.சா.1 பால்பாண்டி அவருடைய கணவர். பால்பாண்டி பெயிண்ட்டிங் வேலை பார்த்து வந்தார். அவருடன் அவரது மகன் பாலகணேசன் பெயிண்ட்டிங் வேலை பார்த்து வந்தார். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் வேலைக்காக சென்று கொண்டிருந்தபோது இரவு சுமார் 8.45 மணிக்கு எனது தங்கை போன் மூலமாக அன்று இரவில் பூவாணி விலக்கில் வைத்து பாலகணேசனின் மீது ஒரு ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டிருப்பதாகவும், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் சொன்னார். மறுநாள் காலையில் நான் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து பாலகணேசனை பார்த்தேன். பாலகணேசனிற்கு தலையிலும், கைகளிலும் காயங்கள் ஏற்பட்டு பேச முடியாத நிலையில் இருந்தார். அதன் பிறகு மேல்சிகிச்சைக்காக அன்றே மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். மதுரை அரசு மருத்துவமனையில் சுமார் 20 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்பு சிகிச்சை பலனின்றி பால கணேசன் இறந்து விட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போலிசார் சொல்லிக்கொடுத்த படிதான் முதல்விசாரணையில் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல, விபத்தில் இறந்துபோனவர் எனது தங்கை மகன் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தை எனது

தங்கை மகன் பாலகணேசனின் கவனக்குறைவால் தான் நடந்தது என்றால் சரியல்ல. விபத்துக்குப் பின்னர் பாலகணேசனை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 13th day of October 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**